நல்லூர் பிரதேச நூலகம்
யாழ்ப்பாணம்



Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 25 ஞாயிற்றுக்கிழமை (11-10-1992) UTHAYAN — A Lively National Tamil Daily சுதிர் 318

## இராணுவக் கட்டமைப்பில் மாற்றம்:

# கூட்டுப்படையிடமே மீண்டும் அனைத்து அதிகாரங்களும்!

## புலிகளிடம் தோல்வி மேல் தோல்வி கண்டதனால் முந்திய ஏற்பாடு ரத்து

கொழும்பு, அக்டோபர் 11

ஸ்ரீலங்கா இராணுவத்தின் கட்டமைப்பில் பெரும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. வடக்கு — கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளைத் திட்டமிடுவது, செயற்படுத்துவது உட்பட சகல விதமான அதிகாரங்களும் மீண்டும் கூட்டுப்படைத் தலைமையகத்திடமே ஒப்படைக்கப்பட்டுள்ளன.

முப்படைத் தளபதிகளிடம் தனித்தனியாகப் பொறுப்புக்களும் அதிகாரங்களும் வழங்கப்பட்ட பின்னர்—

ஆயுதப் படையினர் விடுதலைப் புலிகளிடம் தோல்வி மேல் தோல்வி கண்டு வருவதே—

இப்போதைய மாற்றத்துக்குக் காரணம் எனத் தெரிவிக்கப் படுகிறது.

இவ்வருடம் ஏப்ரல் மாதத் திற்கு முன்னர் இருந்தது போல யுத்த நடவடிக்கைகளுக்கு இனிமேல் கூட்டுப் படைத் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவே பொறுப்பாக இருப்பார்; முப்படைத் தளபதிகள் அவரது வழிகாட்டலின் படியே நடக்க வேண்டும்.

புதிய மாற்றங்களின் படி கடந்த ஏப்ரல் முதல் அதிகாரம் குறைக்கப்பட்ட கூட்டுப்படைத் தலைமையகத்துக்குத் தற்போது முழு அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி இராணுவம், கடற்படை, விமானப்படை என்பவற்றுடன் பொலிஸ்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மருந்துத் தட்டுப்பாடு குறித்து சரியான தகவல் இல்லையாம்

### கொழும்பு சென்று திரும்பிய அதிகாரி கவலை

யாழ்ப்பாணம், அக். 11

யாழ்ப்பாணக் குடாநாட்டில், பெரியாஸ்பத்திரியான போதனா வைத்தியசாலை முதற்கொண்டு, கிராமப் பகுதிகளில் உள்ள ஆதார வைத்தியசாலைகள் வரையும் —

தனியார் வைத்தியர்கள், தனியார் மருந்தகங்கள் தொடக்கம் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் வரையும் — மிகப்பெரிய அளவில் மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது.

அதனால் மருந்து வகைகளின் விலைகள் நோய்களை விடக் கொடியனவாக உயர்ந்துள்ளன.

இந்தளவு தட்டுப்பாட்டின் மத்தியிலும், இங்குள்ள மருந்துத் தேவை குறித்து கொழும்புக்கு போதிய தகவல்கள், தரவுகள் வழங்கப்படுவதில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

இந்தத் திடுக்கிடும் தகவலை அண்மையில் கொழும்பு சென்று திரும்பிய வடக்கின் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவர் வெளியிட்டார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் பலவற்றின் அதிகாரிகள் மத்தியில் கலந்துரையாடுகை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குறைந்தளவு மருந்தே கப்பலில் வந்துள்ளது

யாழ். ஆஸ்பத்திரிக்கும், பிராந்திய சுகாதார சேவைப் பகுதிக்கும் விசர்நாய்க்கடி நோய்த் தடுப்பூசி, ஏற்புத் தடை ஊசி உட்பட மருந்து வகைகள் 'குமாரி' கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளன.

வழமைபோல இம்முறையும் குறைந்தளவு மருந்து வகைகளே யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

'குமாரி' கப்பலில் இருந்து பொருள்கள் நேற்று இறக்கப்பட்ட போதிலும் எதிர்பார்க்கப்பட்டதுபோல தபால் பொதிகள் நேற்று இறக்கப்படவில்லை என்றும்—

கப்பலின் அடித்தளத்தில் தபால் பொதிகள் இருப்பதால் அநேகமாக அவை இன்று மாலையே இறக்கப்படும் என்றும்—

தபால் பொதிகளை எடுத்துவர யாழ். பிரதம தபாலக ஊழியர்கள் நாளை திங்கட்கிழமையே பருத்தித்துறை செல்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-5-15)

## காரைநகர் படையினர் பீரங்கித்தாக்கு

சுழிபுரம், அக். 11

காரைநகர் கோவளப் பகுதி கடலில் நேற்றுக் காலை பரவலாகத் தாக்குதல் இடம்பெற்றது. கடலில் இருந்து பொன்னாலை, திருவடி நிலைப் பகுதியை நோக்கியே தாக்குதல் நடத்தப்பட்டது.

பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் கோவில் மற்றும் கடற்பகுதியில் பீரங்கிக் குண்டுகள் விழுந்து வெடித்தன. (அ-10)

## 'கொப்பே' இல்லாததால் ஹமில்டன் கை ஓங்குகிறது!

கொழும்பு, அக். 11

ஸ்ரீலங்கா இராணுவத்தின் கட்டமைப்பில் பெரும் மாற்றம் ஏற்பட்டு மீண்டும் கூட்டுப்படைத் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவின் கை ஓங்குவதற்கு லெப்டினன்ட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவின் மறைவும் வாய்ப்பாக அமைந்ததாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இராணுவத் தளபதியாக இருந்த ஹமில்டன் வணசிங்க ஓய்வு பெற வேண்டிய காலம் வந்தபோது —

ஸ்ரீலங்கா அரசு கூட்டுப் படை தலைமையகம் என்ற அமைப்பை ஏற்படுத்தி, அதன் தளகர்த்தராக ஹமில்டனை நியமித்தது.

இதன் மூலம் பாதுகாப்புப் படை மீதான பிடி தொடர்ந்து ஹமில்டன் வசமே இருந்து வந்தது.

அரசின் இந்த நடவடிக்கைக்கு களத்தில் நின்று இராணுவ நடவடிக்கைகளை வழி நடத்தும் — இரண்டாவது மட்ட இராணுவத் தளபதிகள் — எதிர்ப்புத் தெரிவித்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிட்டு இன்னும் ஐரோப்பாவில் தான்!

### பி. பி. ஸி. வெளியிடும் தகவல்

லண்டன், அக். 11

விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) இன்னமும் ஐரோப்பாவில்தான் தங்கியிருக்கிறார்.

அவர் இலங்கை சென்றிருப்பதாக வெளியான செய்திகள் தவறானவையாகும்.

பி.பி.ஸியின் சிங்கள சேவையில் இப்படித் தெரிவிக்கப்பட்டது.

திரு. கிட்டு இலங்கை சென்றுள்ளதாக வெளியான செய்தி உண்மையா எனக் கேட்டு பலர் பி. பி. ஸிக்கு கடிதம் எழுதியிருப்பதாகவும்—

தாங்கள் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து அச்செய்தி உண்மையல்ல என்று தெரியவருவதாகவும் சிங்கள சேவையில் அறிவிக்கப்பட்டது. (உ-10)

## அராலிச் சம்பவ அறிக்கை விரைவில் வந்தது எப்படி?

### சந்தேகம் கிளப்புகிறார் லலித்

தளபதிகள் டென்ஸில் கொப்பேகடுவ, விஜய விமலரத்ன உட்பட உயர்நிலை இராணுவ அதிகாரிகள் பத்துப் பேர் கொலை செய்யப்பட்ட அராலிச் சம்பவம் குறித்து விசாரணைகளை விரைவில் முடித்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது எப்படி?

விசாரணைகள் குறுகிய காலத்தில் முடிவுற்றது சந்தேகத்தைத் தருவதாக உள்ளது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் திரு. லலித் அத்துலத்முதலி. பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு சந்தேகம் எழுப்பியுள்ளார்.

அவ்வளவு விரைவாக அறிக்கை வெளிவந்ததால் அதன் உண்மை பொய் குறித்து மக்கள் மத்தியில் பலவித சந்தேகங்கள் எழுந்துள்ளன—

இவ்வாறு அவசர அவசரமாக விசாரணை அறிக்கைகள் வெளிவந்தால், விசாரணை ஆணைக்குழுக்கள் பற்றிய நம்பகத் தன்மை குன்றிவிடும் என்றும் லலித் அத்துலத்முதலி தமது பேட்டியில் தெரிவித்தார். (அ-10)

வாய்க்கால் நீர்தனையும்
வாய்ப்பாக்கி தேக்கிடுவீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூனியப் பிரதேசங்களாக அம்பாறை தமிழ் கிராமங்கள்

அம்பாறை மாவட்டத்தில் மல்வத்த வழக்காப்பிட்டி, மொதுநகரம், கணபதிபுரம், நாவிதாம், கிராமம், 11 ஆம் கிராமம், 14 ஆம் கிராமம், 15 ஆம் கிராமம், 16 ஆம் கிராமம், சவளக்கடை ஆகிய பகுதிகள் இன வன்முறைகளால் அழிந்து சூனியப்பிரதேசங்களாகக் காட்சி தருகின்றன. தமிழர்கள் செல்ல முடியாத ஆபத்து நிறைந்த இடங்களாக அவை மாறியுள்ளன என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மற்றும் சிங்கள முஸ்லிம் வன்முறைக் கும்பல்கள் தேசவிரோத குழுக்கள் ஆகியவற்றின் நடமாட்டம் அப்பகுதிகளில் நிறைந்து காணப்படுகிறது.

இப் பகுதிகளில் வாழ்ந்த தமிழர்கள் இன வன்முறைகளால் அங்கிருந்து வெளியேறி காரைதீவு, திருக்கோவில் ஆகிய இடங்களில் நீண்டகாலமாக அகதிகளாக வாழ்கின்றனர். இந்த மக்களின் வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன.

அங்குள்ள கட்டடங்கள் பலவற்றில் இராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர். இந்தக் கிராமங்கள் பற்றைகள் படர்ந்து காடுகளாகக் காட்சியளிக்கின்றன.

10 ஆம், 12 ஆம் கிராமங்களில் சிங்களவர்களும், முஸ்லிம்களும் குடியமர்த்தப்பட்டுள்ளனர். சவளக்கடைப் பகுதியில் அண்மையில் சுமார் 100 எலும்புக் கூடுகள் வரை காணப்பட்டன—என்றும் அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (த-5)

## யு. எஸ். எயிட் விவசாயத் திட்டம்:

## உதவிக்கான பெறுமதியை திருப்பிச் செலுத்த வேண்டும்

யு. எஸ். எயிட் திட்டத்தின் மூன்றாவது கட்டத்திற்குத் தெரிவுசெய்யப்படும் விவசாயிகள் தாம் பெறும் உதவிக்கான பணப் பெறுமதியை முழுமையாக திருப்பிச் செலுத்துதல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை இத் திட்டத்தை யாழ். மாவட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைவுடனே முழுமையாக மேற்கொள்ளவுள்ளனர்.

இத் திட்டத்தின் பயனாளிகளாக 7 ஆயிரத்து 500 விவசாயிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இந்த மூன்றாவது கட்டம் 2,850 ஏக்கர் விவசாய நிலத்தை உள்ளடக்கியதாக மேற்கொள்ளப்படவுள்ளது.

3 ஆவது கட்டத்திற்கான பயனாளிகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் தெரிவுசெய்யும்.

இந்தத் திட்டத்தில் சம்பந்தப்பட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களை இணைப்பாளர் தெரிவு செய்யும்.

யு. எஸ். எயிட் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு விதை நெல், விதை தானியம், உரம், கிருமி நாசினிகள், நீரிறைக்கும் இயந்திரம், மண்வெட்டி என்பன வழங்கப்படவுள்ளன.

யு. எஸ். எயிட் திட்டத்தின் முதலாவது கட்டத்தில் இவை முற்றிலும் இலவசமாகவே வழங்கப்பட்டிருந்தன. இரண்டாவது கட்டத்தில் இவற்றின் பெறுமதியில் 25 சதவீதத்துக்கான பணம் பயனாளிகளிடமிருந்து மீளப் பெறப்பட்டது.

பயனாளிகள் தெரிவு செய்யும்போது இடம்பெயர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. (ஒ-ம-162)

## வட-கிழக்கு மாகாண சபையின்

## ஊழியர் இடமாற்ற அறிவித்தல் இன்னும் வெளியாகவில்லை

1993 ஆம் ஆண்டுக்கான ஊழியர் இடமாற்றம் பற்றிய அறிவித்தல் வடக்கு-கிழக்கு மாகாணசபை இதுவரை வெளியிடவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இடமாறவுள்ள ஊழியர் இடமாற்றம் சம்பந்தமான விண்ணப்பம் அறிவித்தல் வருடம் இறுதிக்கு ஐந்து மாத காலம் முன்னதாகவே வெளியிடப்பட்டிடும்.

ஆனால் அடுத்த வருடத்திற்கான இடமாற்ற அறிவித்தலை வடக்கு - கிழக்கு மாகாண சபை இதுவரை வெளியிடவில்லை.

இந்த இடமாற்ற அறிவித்தல் தாமதமாகுமானால் அடுத்த வருடத்திற்கான இடமாற்ற வேலைகளை அவசர அவசரமாகவே மேற்கொள்ள வேண்டி வருமெனவும் —

இதனால் வழமையான நடைமுறைகளைப் பேண ஆகக் குறைந்தது ஒருமாத கால அவகாசம் தானும் இல்லாமலே ஊழியர்கள் இடமாற்றப்படலாமெனவும் —

இடமாற்றத்தினை ஆட்சேபித்து மேன்முறையீடு செய்ய அவகாசம் இல்லாமல் போகலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (த-ம-126)

### ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், அக். 11

மாவீரர் தினத்தையொட்டி விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் நடாத்த இருந்த பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பேச்சு, பாட்டுப் போட்டிகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

சகல பாடசாலை அதிபர்களுக்கும், கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கும், மாணவர்களுக்கும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு இதனை அறிவித்துள்ளது. (ர)

## ஆஸ்திரேலியா, நியூசிலந்தில் தமிழை ஒரு பாடமாக்க முயற்சிக்கவும்

### சிட்னி மாநாட்டில் தீர்மானம்

சிட்னி, அக். 11

ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலந்து ஆகிய நாடுகளின் உள்ள பாடப் புத்தகங்களில் தமிழ்மொழியும் ஒரு பாடமாகச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலந்து ஆகிய நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் பாடுபட வேண்டும்.

சிட்னியில் அண்மையில் நடைபெற்ற உலகத் தமிழர் பண்பாட்டு மாநாட்டில் மேற்கண்டவாறு கோரும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

அனைத்துலக தமிழ்ப் பண்பாட்டுக் கழக ஆதரவில் சிட்னி பல்கலைக் கழகத்தில் மூன்று தினங்களாக இம் மாநாடு நடந்தது.

இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஹொங்கொங், மொரிஷியஸ், பப்புவா நியூகினி, அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து முதலான நாடுகளில் இருந்து தமிழறிஞர்கள், கல்விமான்கள் மற்றும் பத்திரிகையாளர்களுமாக சுமார் 500 பேர் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். (ஒ-எ)

### உற்சவம்

நாவலையடி, அக். 11

சரித்திரப் பிரசித்தி பெற்ற நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயத்தின் கப்பல் திருவிழா நாளை திங்கட்கிழமை நடைபெறும். (த-144)

### வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், அக். 11

சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த் திருவிழா நேற்றுக் காலை பக்தி பூர்வமாகவும் சிறப்பாகவும் நடைபெற்றது.

காலை 8.30 மணிக்கு இருப்பிடத்தில் இருந்து புறப்பட்ட தேர் முற்பகல் 10 மணியளவில் மீண்டும் வந்து சேர்ந்தது.

குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல வழியைத் தரிசிக்க ஆயிரக்கணக்கான அடியார்கள் கோவிலில் திரண்டிருந்தனர்.

இன்று மாலை 4 மணிக்கு சுற்றோவளம் கடற்கரையில் கடல் தீர்த்தம் நடைபெறும். (அ-51)

## பிரேமா தம்பதியினருக்கு மாலேயில் வரவேற்பு

ஜனாதிபதி பிரேமதாசவும் திருமதி ஹேமா பிரேமதாசவும் நேற்று மாலைதீவு தலைநகர் மாலேயைச் சென்றடைந்த போது விமான நிலையத்தில் வைத்து அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

பள்ளிச் சிறார்கள் வரிசையாக நின்று இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளின் கொடிகளை அசைத்து வரவேற்பு அளித்தார்கள். ஜனாதிபதிக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் 21 பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

மாலேயில் உள்ள இலங்கை வங்கி கிளையின் புதிய கட்டடத்தை ஜனாதிபதி திறந்து வைத்தார்.

ஜனாதிபதி பிரேமதாசவும் மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கயூமும் நேற்றிரவு பேச்சு வார்த்தை நடத்தினர். (ஒ-10)

## துப்பாக்கியை ஒத்த பொருள்களும் சிங்கள அதிகாரிகளுக்கு அலர்ஜியாம்

கொழும்பு, அக். 11

துப்பாக்கி மட்டுமல்ல துப்பாக்கி போன்ற வடிவத்தைக் கொண்ட பொருள்கள் கூட தென்பகுதி பெரும்பான்மை இன அதிகாரிகளுக்கு அலர்ஜியாக உள்ளதாம்.

இத்தகைய பொருள்கள் கூட வடபகுதிக்கு எடுத்துச் செல்லப்படக் கூடாது என்பதில் அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றித் தெரியவருவதாவது:

யுனிசெப் நிறுவனம் யாழ். மாவட்ட அதிபரூடாக கனிஷ்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் சிறுவர்களுக்கு வழங்குவதற்கென பாடசாலை உபகரணங்களின் தொகுதி ஒன்றை புனர்வாழ்வு அமைச்சிடம் வழங்கியுள்ளது.

இந்தப் பொருள்கள் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பதிகாரி ஊடாக இங்கு விநியோகிக்கப்படவுள்ளன. அதற்காக அவை தனித்தனியாகப் பொதி செய்யப்பட்டு 'குமார' கப்பலில் வடபகுதிக்கு எடுத்து வர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யுனிசெப் வழங்கிய பொருட்களில் துப்பாக்கியின் அமைப்பை ஒத்த பென்சில் சீவும் கட்டரும் ஒன்று. ஆனால் அவை யாழ். மாவட்டத்திற்கு எடுத்து வரப்படும் பாடசாலை உபகரணப் பொதிகளில் இடம்பெறவில்லையாம்.

துப்பாக்கி உருவத்தில் அமைந்த கட்டர்களை யாழ். மாணவர்களுக்கு வழங்கினால் அவர்களின் உள்ளங்களில் துவேஷமும் துப்பாக்கியைப் பற்றிய நினைவும் மேலோங்கும் என புனர்வாழ்வு அமைச்சு உயரதிகாரிகளுக்கு ஏற்பட்ட அச்சமே அதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை—

யுனிசெப் வழங்கிய பொருள்களில் வேறு சில பொருள்களும் கூட இங்கு வரும் பொதிகளில் இடம்பெறவில்லை என்றும்—

அவை பெரும்பான்மை இனத்தவரின் பிள்ளைகளுக்காக எடுத்து வைக்கப்பட்டுவிட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-ம)

## கூட்டுப்படை...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

பகுதியும் கூட்டுப் படைகள் தலைமையகத்தின் ஆணைக்கு உட்பட்டே செயற்படும்.

புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் பற்றித் திட்டமிடுதல், நடவடிக்கைகளைச் செயற்படுத்தல் என்பன இனி மேல் கூட்டுப்படைத் தலைமையகத்தின் பொறுப்பாக இருக்கும்.

ஜனாதிபதி பிரேமதாச முன்னர் வெளியிட்டிருந்த விசேட வர்த்தமானி அறிவித்தலின்படி வடக்கிலிருந்து கூட்டுப் படைத் தலைமையகத்துக்கு கொடுக்கப்பட்டிருந்த சகல அதிகாரங்களும் நீக்கப்பட்டிருந்தன.

### 600 பேர் பலி

ஆனால் அண்மைய தினத்திலிருந்து இன்றுவரை 600க்கும் அதிகமான இராணுவத்தினர் புலிகளால் கொல்லப்பட்டிருப்பதுடன், பெருந்தொகையான ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து கூட்டுப்படைகள் தலைமையகம் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுதல், பாதுகாப்பு படையினரின் பேச்சுவார்த்தை வசதிகளை இலகுபடுத்தல் போன்ற நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டிருந்தது.

புதிய ஏற்பாட்டின் படி சகல அதிகாரங்களும் கூட்டுப் படைகள் தலைமையகத்துக்கு மீளளிக்கப்பட்டுள்ளன.

இனிமேல் கூட்டுப்படைகள் தலைமையகத்தளபதிலெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவுக்கு கீழ்தான் இராணுவ கடற்படை, விமானப்படை, பொலிஸ் என்பவற்றின் நடவடிக்கைகளை ஒன்றிணைத்து நடத்துவதற்குப் பொறுப்பானவராக இருப்பார்.

புதிய மாற்றங்கள் குறித்து கருத்துத் தெரிவித்த பாதுகாப்பு உயர் அதிகாரி ஒருவர்—

தனிப்பட்டவர்கள் அல்ல, நிறுவன யுத்தம் புரியும் முறை தான் முக்கியம். எவர் பொறுப்பை ஏற்றாலும் வடக்கு-கிழக்கிலிருந்து தெற்கிற்கு சடலங்கள் வருவது தொடரும் என்றார். (ஒ-10)

## லண்டனில் குண்டு வெடிப்பு

மேற்கு லண்டனிலுள்ள படிங்டன் கிறீன் உயர் பாதுகாப்பு பொலிஸ் நிலையத்தின் வாசலில் நேற்று குண்டு ஒன்று வெடித்தது.

குண்டு வெடிப்பினால் அங்கே இருந்த பொலிஸ் குடியிருப்பு தொடர் கட்டடம் சேதமுற்றது.

ஐரிஷ் தீவிரவாதிகளே இக் குண்டு வெடிப்புக்குக் காரணமாக இருக்கலாமெனப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-10)

## காலமானார்

முன்னாள் மேற்கு ஜேர்மனியின் அதிபராக முன்னர் இருந்த வில்லி பிராண்ட் நேற்று முன்தினம் தமது 78 ஆவது வயதில் காலமானார். 1971 ஆம் ஆண்டு அவருக்கு நோபல் சமாதானப் பரிசு வழங்கப்பட்டது. (த-ம)


## தேவை

- தமிழ், ஆங்கில தட்டச்சு வேலை செய்பவர்
- எழுதுவினைஞர்
- காசாளர்

விண்ணப்பங்கள் யாவும் 20-10-92-க்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

வாணி இன்ஸ்ரிரியூட்,
கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

(4939)

## திருவிளக்கு பூசை

இணுவில்
திருவருள்மிகு சிவகாமி அம்மன் கோவில்

10 ஆம் ஆண்டு வருடாந்த திருவிளக்கு பூசை இன்று (11-10-92) ஞாயிறு மாலை 5.00 மணிக்கு இடம்பெறும்.

தேவஸ்தானம்,
இந்து இளைஞர் பேரவை.

(22845)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நல்லூர் இளை நூலகம் மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

வடமராட்சி கிழக்கில்

# இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு தற்காலிகக் கொட்டகை வசதி

தாளையடி, அக். 11

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்த வடமராட்சி கிழக்கு பாடசாலைமாணவர்கள்கல்வி கற்க வசதியாக வடமராட்சி கிழக்கில் தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து மாலையில் இயங்கி வந்த மூன்று பாடசாலைகள் காலை நேரத்தில் இயங்க வசதி செய்யப்பட்டுள்ளது.

செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் — ஆழியவளை சீ. சீ. தமிழ் கலவன் பாடசாலை மற்றும் வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கும் கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளன.

செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயத்திற்கு கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது.

இவை தவிர மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, குடத்தனை அமெரிக்கன் மிஷன் பாடசாலை, குடத்தனை றோமன் கத்தோலிக்க பாடசாலை ஆகியவற்றிலும் தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளன. (த-144)

ஈழ அகதிகளை

## திருப்பி அனுப்பும் நடவடிக்கைகள் மீண்டும் இடைநிறுத்தப்பட்டன

தமிழ் நாட்டில் தங்கியுள்ள இலங்கை அகதிகளில் எஞ்சியோரை இலங்கைக்கு திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை இந்திய அரசு மீண்டும் தற்காலிகமாக இடைநிறுத்தி உள்ளது.

திருப்பி அனுப்பும் பணி மீண்டும் எப்போது ஆரம்பமாகும் என்பது பற்றி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை ஆனால் அடுத்த வருடம் ஜனவரிக்குப் பின்னே இந் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புத் தமிழ் பத்திரிகை ஒன்று இச் செய்தியை வெளியிட்டுள்ளது. (த)

## ஐ. நா. மனித உரிமைகள்குழு மட்டக்களப்பு விஜயம்

கொழும்பு, அக்; 11

இலங்கை வந்துள்ள ஐ; நா.வின் மனித உரிமைகள் குழு பிரதிநிதிகள் நேற்று முன்தினம் விசேட விமானம் மூலம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு விஜயம் செய்த மேற்படி குழு தடுப்புக் காவலில் உள்ளோர் பற்றிய விவரங்களையும், அவர்களது வசதிகள் பற்றியும் ஆராய்ந்தது;

திரு. லான்பென் ஜோன் தலைமையிலான இந்தத் தூதுக்குழு மட்டக்களப்பு கத்தோலிக்க மண்டபத்தில் மட்டு. மாவட்ட சமாதானக் குழுவையும் சந்தித்தது. (த)

## டிப்ளோமா பரீட்சைகள்

யாழ்ப்பாணம், அக்; 11

யாழ் பல்கலைக்கழக பட்டப்பின் கல்வி டிப்ளோமா (முழு நேரம்/பகுதி நேரம்) பரீட்சைகள் அடுத்த மாதம் 4ஆம் திகதி ஆரம்பமாக இருக்கின்றன. (த-3)

## எய்ட்ஸ் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், அக்: 11

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் முழு நிலா நாள் கருத்தரங்குத் தொடரில் இன்று 'எய்ட்ஸ் நோய்' பற்றிய கருத்துரை இடம்பெறும்.

யாழ். இந்து குமாரசுவாமி மண்டபத்தில் இந்நிகழ்ச்சி நடைபெறும்.

பிற்பகல் 3-30 மணி முதல் 4-15 வரை நடைபெறும் முதல் நிகழ்ச்சியில் 'அந்நிய செலாவணி விகித நிர்ணயமும் அதன் சமகாலப் போக்குகளும்' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. கா. கந்தையா உரை நிகழ்த்துவார்.

அதைத் தொடர்ந்து இடம்பெறும் நிகழ்ச்சியில் யாழ். மாநகரசபை வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் 'எய்ட்ஸ்' பற்றி கருத்துரை வழங்குவார். நோய் பற்றிய விளக்கப்படங்களும் காண்பிக்கப்படும். (உ-162)

## பிரச்சினைகளைத் தீர்க்க பேச்சுவார்த்தையே வழி

### ஜனாதிபதி சொல்கிறார்

கொழும்பு, அக். 11

பேச்சுவார்த்தைகள் மூலம் ஜனநாயக வழிகளில் பிரச்சினைகளைத் தீர்ப்பதைத் தவிர வேறு வழியில்லை; தேர்தல்கள் மூலம் மக்கள் தங்கள் வாக்குகளைப் பயன்படுத்தி பிரச்சினை நாகரிகமான முறையில் தீர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும் போது ஆயுதம் மூலம் தீர்த்துக் கொள்ள நாம் ஏன் முயலவேண்டும்.

கொழும்பில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போது ஜனாதிபதி பிரேமதாஸ இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

இதன் காரணமாகவே நான் முன்பு ஒரு முறை விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்குப் போனேன் — என்றும் அவர் மேலும் சொன்னார். (த)

## ஜனாதிபதி தீர்வு ஒன்றை நெருங்கிக் கொண்டிருக்கிறார்

### வடமேல் மாகாண முதலமைச்சர்

நமது நாட்டில் நீண்ட காலமாக இடம் பெற்று வரும் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சிகளில் ஜனாதிபதி பிரேமதாஸா தற்போது ஈடுபட்டுள்ளார். தீர்வு ஒன்றை அவர் நெருங்கிக் கொண்டிருக்கிறார்.

வடமேல் மாகாண முதலமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா இவ்வாறு தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினையை சகலரும் ஏற்றுக் கொள்ளும்படி, விரைவில் முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டின் சகல மாவட்டங்களையும் அபிவிருத்தி செய்வதே ஜனாதிபதியின் பிரதான நோக்கமாகும் — என்றும் அவர் சொன்னார். (த)


யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

பழைய மாணவர் சங்கம் புனரமைப்பு

## பொதுக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் புனரமைப்புப் பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 18-10-92 பி. ப. 2 00 மணிக்குக் கல்லூரியில் நடைபெறும். பழைய மாணவர்கள் அனைவரும் தவறாது சமூகமளித்து கூட்டத்தை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி:

திருமதி P. இராஜேந்திரசிங்கம்,
தலைவர் / அதிபர்.

(22839)



## யாழ். திருமறைக் கலா மன்றம்

வெளியிடும்

"கலைமுகம்"

ஆடி - புரட்டாதி இதழ் - 1992

வெளிவந்துவிட்டது!

தனிப் பிரதியாகவும், ஆண்டு சந்தாவாகவும் பெற விரும்புவோர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

- திருமறைக் கலாமன்றம்.

238, பிரதான வீதி,

(இ-3582)



## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 22-06-1924

உதிர்வு: 23-09-1991

அமரர்

S.R. பொன்னம்பலம் (கோவிலாக்கண்டி)

(ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர்)

திதி: 11—10—1992

இறைவன் தன்மீது அன்பு கொண்டவர்களை வெகு விரைவிலேயே சேர்ந்து கொள்வார் போலும்...

- மனைவி.

அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(22796)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

B. A. Part - I;
B Com. Part - I

இரண்டாம் ஆண்டு கற்கை நெறிக்கான விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.

பொருளியல்:
எஸ். வரதராஜன்
B. A. (Hons )

ஆரம்பம்:
18 - 10 - 1992
ஞாயிறு 10-00 a m;

பாரதிதாசன் கல்வி நிறுவனம்
(BECON)
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:
G. A. Q ;
Ist. in Com.
விரிவுரைகள் நடைபெறுகின்றன;
11 — 10 — 1992
16 — 10 — 1992

(இ-3578)



## தீவக பாக்கியம் குழந்தைகள்

★ சிகிச்சை நிலையம் ★

கே. கே. எஸ். வீதியில், மனோகராச் சந்தியில் இருந்து 100 யார் தொலைவில் காலை 8-30 தொடக்கம் பிற்பகல் 1-30 மணி வரையும், கல்வியங்காட்டில் இருந்து ஒரு மைல் தொலைவில் உள்ள இருபாலைச் சந்தியில் பிற்பகல் 2-30 தொடக்கம் மாலை 6-30 மணி வரையும் சேவையாற்றும்.

(22841)



## முதலாம் ஆண்டு நினைவுகள்



திருவாட்டி
ஆசைப்பிள்ளை பரமேஸ்வரி

திதி: 11 — 10 — 1992

தங்கள் நினைவு
எங்கள் உள்ளத்தில்
என்றும் பசுமையுடன்......

கணவன், பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

76/2, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-3473)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Hy-Line பிறவுண், கறுப்பு, சேவல் குஞ்சுகள் எம்மிடம் விற்பனைக்குண்டு. ரவி றேட்டர்ஸ் திருநெல்வேலி. ச. ரவீந்திரன், கொண்டாவில் கிழக்கு, (நாகபூஷணி அம்மன் கோவிலடி) (5369)

## உடன் விற்பனைக்கு

Highline+ Prima+ Bahira வெள்ளை, கறுப்பு, பிறவுண் மேட்டு குஞ்சுகளும், புறொயிலர் குஞ்சுகளும், சேவல் குஞ்சுகளும் உடன் தொடர்பு கொள்ளவும். 'மல்லிகாபதி' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (22795)

## இடம்மாற்றம்

இதுவரை காலமும் கோவில் வீதி, நல்லூரில் இயங்கி வந்த சித்ராலயா விருடியோ 05-10-92 முதல் ஸ்ரான்லி வீதியில் உள்ள பழைய இடத்தில் இயங்குகின்றது என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம். (5364)

## ஆண்டு -6 அனுமதி

பாடசாலை அனுமதிப் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் 01 - 10 - 92 முதல் 16 - 10 - 92 வரை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். Bond Book - Stall, 582, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-3539)

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு - 6 அனுமதி மாதிரித் தேர்வு 11-10-1992 ஞாயிறு முற்பகல் 8-00, முற்பகல் 11-00 நடைபெறும். மாதிரி வினாத்தாள்களையும் அண்மையில் வெளியிட்ட மாதிரிப் பயிற்சியையும் (விடைகளுடன்) பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், இல 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (22817)

## ஆண்டு - 5 புலமைப் பரிசில்

அடுத்த புலமைப் பரிசில் பரீட்சைக்காக இப்பொழுது இருந்தே பயிற்சி அளிக்கும் ஆர்வமுள்ள பெற்றோர்களுக்காக மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். வீட்டில் வைத்து விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institute. 582, Stanley Road, Jaffna. (சி-3540)

தற்போது ஆண்டு 4 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு 1993 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பரீட்சை 11-10 92 ஞாயிறு முற்பகல் 8-00, முற்பகல் 11-00 நடைபெறும். அண்மையில் வெளியிடப்பட்ட மாதிரிப் பயிற்சியையும் பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (22818)

## மணமகள் தேவை

செவ்வாய்க்குற்றமற்ற, இரசாயனங்கள் கூடிய. இந்து. பொறுப்பற்ற, அழகிய, அச்சுவினி நட்சத்திரம். 5½ அடி உயரம். மத்திய கிழக்கு நாட்டில் நிரந்தரமாக 10 வருடம் சேவையாற்றிக் கொண்டிருப்பவருக்கு 30 வயதுக்கு கீழ்ப்பட்ட, படித்த, அழகிய பெண் தேவை. பட்டதாரிப் பெண்களும் விண்ணப்பிக்கலாம். சீதனம் எதிர்பார்க்கப்படும். இல. 862. மே/பா, உதயன், (5363)

## மணமகன் தேவை

இந்து, I. A: B. படித்து வேலை செய்யும் அழகிய 36 வயது (2 இல் செவ்வாய், அவிட்டம், இரசபாவம் 8) மணப்பெண்ணுக்குப் பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். சீதனம் தரப்படும். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (22835)

## திருமண சேவை

பெற்றோர்களே வாருங்கள்! முப்பது வருடங்களாக ஒரே இடத்தில் சேவையாற்றி பல்லாயிரக்கணக்கான திருமணங்களை நிறைவேற்றிய ஒரே ஸ்தாபனம் வெளிநாட்டு உள்நாட்டு மணமக்களும், சாவக்கிரகங்கள் குறைந்த, கூடியதும் உள்ளன. தட்சணாமூர்த்தி, இல. 140, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்: செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாட்களில். (22836)

## நளவெண்பா

ஆண்டு 10, 11 வகுப்புகளுக்குரிய நளவெண்பா தொகுப்பு தெளிவுரை, விளக்கவுரை விரிவான விளக்கத்துடன் வெளிவந்துள்ளது. ஆக்கம் என். பாலா, விலை 30/- சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (சி-3565)

## சோதிடம்

உங்கள் வாழ்க்கையில் பிரச்சினைகள் எதுவானாலும் நீங்கி, சுபீட்சமடைய அதிர்ஷ்டம் அழைக்கிறது. சாதகத்துடன் நேரில் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஸ்ரீ சக்தி கணேச உபாசகர் ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், கைலாசபிள்ளையார் கோவில் சந்தி, நல்லூர். (22813)

## நவலினத் தோட்டம்

விளாத்தியில் ஓடிய ஒரு வருடத்தில் பலன்தரும் திடகாத்திரமான சிறந்த இனத் தோடங்கன்றுகள், மற்றும் பதிவைத்த மாங்கொக்கொய்யா நாற்றுக்கள், எலுமிச்சை நாற்றுக்கள் விற்பனைக்குண்டு. முந்துவோருக்கு பூக்கள், காய்கள் அடங்கிய நாற்றுக்கள் வழங்கப்படும். இடம்: துரைஐயா, நிலாவிரையடி, நவக்கிரி, புத்தூர். (4990)

## துரிதமீட்டல் பயிற்சி

வெளிவந்துவிட்டது பிரபல பாடசாலை ஆண்டு 6 அனுமதிப் பரீட்சைக்கும், ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கும் ஏற்ற வகையில் புதிய கல்வி நிலையத்தால் புதிதாக வெளியிடப்பட்ட துரித மீட்டல் பயிற்சி (விடைகளுடன்) புதிய கல்வி நிலையத்திலும், யாழ் நகர் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். (22819)

## மாதிரி வினாத்தாள்கள்

O/L வகுப்புகளுக்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம் (சைவம்/றோ; க/ கிறிஸ்தவம்), வர்த்தகம் விவசாயம், மனைப் பொருளியல், சித்திரம், சங்கீதம், நடனம், ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் (விடைகளுடன்) மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond Institute, 582, Stanley Road, Jaffna. (சி-3541)

## கல்வி

G C E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும். ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கு விசேட சித்திக்குக் கற்பிப்பதில் 25வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஒரு மாதத்தில் தொடர் 40 மணித்தியாலத்திற்குள் விசேட சித்திக்கு கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் இல. 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, வோகேந்திரா வீதி, கண்டிக்குளி. (22828)

## வெளிவந்துவிட்டது

சைவநெறி ஆண்டு-10 துரித மீட்டலுக்கான வினா-விடை ஆக்கம்: க. சந்திரசேகரம். மீள்பார்வை: ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள், வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம். ஏகவிநியோகஸ்தர்கள்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-3466)

## தவறிவிட்டது

வேலுப்பிள்ளை குலசிங்கம் ஆகிய நான் அரிக்கையம்மன் கோவில் வீதியில் தேசிய அடையாள அட்டையை தவறவிட்டுவிட்டேன். தயவு செய்து கண்டெடுத்தவர்கள் நாகலிங்கம், மே/பா வேலுப்பிள்ளை குலசிங்கம், கோயில் வீதி, மல்லாகம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (4991)

நாகலிங்கம் தவராஜாவின் 453541290 V இலக்க அடையாள அட்டை, பாஸ் அடையாள அட்டை, சாரதி லைசென்ஸ் அடங்கிய கறுப்பு பேர்ஸ் தாவடிச் சந்திக்கும் நாச்சிமார் கோவிலுக்கும் இடையில் 08-10-92இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அறிவிக்கவும். நாகலிங்கம் தவராஜா நாகலிங்கம் வீதி, தாவடி தெற்கு, கொக்குவில். (22837)

## மரக்கன்றுகள்

மரக்கன்றுகள் அன்பளிப்பாக வழங்குகிறோம். இச்செயற் திட்டத்திற்கு அவசியமான வெற்றுப் பாமோ பக்கெற்றுகள் மற்றும் மில்க்வைற் மேலுறைகள் மாற்றாகத் தந்து மரக்கன்றுகளைப் பெற்றுக் கொள்ளவும். உங்களுக்கு உதவிட எங்களுக்கு உதவுங்கள். மில்க்வைற். (சி-3460)

---

## தொழிலாளர் கல்வி சான்றிதழ் நெறி
## 2 ஆம் அரையாண்டு பரீட்சை-1991

மேற்குறிப்பிட்ட பரீட்சை நவம்பர் மாதம் 21ஆம், 22ஆம், 28ஆம், 29ஆம் திகதிகளில் நடைபெறும். மீள்பரீட்சார்த்திகள் பரீட்சைக் கிளையில் பெறப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து தகுந்த கட்டணப் பற்றுச்சிட்டுடன் 23-10-92க்கு முன்பாக சமர்ப்பிக்கவும்.

-பதிவாளர்.

(சி-3472)

---

# ஆறாம் மாத நினைவஞ்சலி

ஜனனம்: 12 — 09 — 1967

மரணம்: 11 — 04 — 1992



## குணரட்ணம் குணராஜ் (குணா)

(யா/ இந்துக்கல்லூரி பழைய மாணவன்)

கண்மணியே குணா! கணப்பொழுதில்
நீ காற்றோடு காற்றாகிப் போனதெல்லாம்
வெறும் கனவாகிப் போகாதோ?
மாதங்கள் ஆறு சென்றதையா - ஆனாலும்
ஓயாது எங்கள் கண்ணீர் மட்டும்!

உன் பிரிவால் துயருறும்;
- குடும்பத்தினர்.

34, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.

(22833)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

## வேலும்மயிலும் வெற்றிவேலு

(உரிமையாளர் - வேலும்மயிலும் வெற்றி வேல்ஸ்; பணி நிலையம், யாழ்ப்பாணம்)

தோற்றம்: 25 — 07 — 1945

மறைவு: 11 — 09 — 1992

திடீரென்று வந்தான் காலன்
தீயினில் வெந்தது உடல்
காற்றினிலே கலந்தது ஆன்மா

இன்று 11 - 10 - 1992 நடைபெறும் அன்னாரது வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சிகளில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்;
சகோதரர்கள், மைத்துனர்கள்;
சகலர், பெறாமக்கள்.

342, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி-3572)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### நிலையில்லா நிலைப்பாடு!

ஆயுதங்களைக் கீழே வைத்தவர்களுடனேயே இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து அரசாங்கம் பேசும்; வன்முறைகள் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண முயல்பவர்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை எதையும் நடத்தமாட்டாது.

இவ்வாறு அறிவித்திருப்பவர் ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன்.

ஈழப்போர் இரண்டின் பிரதம சூத்திரதாரியாக விளங்கிய ரஞ்சன் விஜேரத்ன காலத்தில், 1991 ஆரம்பத்தில், விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை அறிவித்தபோது, பேச்சுவார்த்தைக்கு நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. அவற்றில் முதலாவது விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்பதாகும்.

ஆனால் அதன் பின்னர் சில காலத்தில் பேச்சுவார்த்தை குறித்து அரச தரப்பினர் பிரஸ்தாபிக்கும்போது நிபந்தனைகள் குறித்து வலியுறுத்துவது தவிர்க்கப்பட்டு வந்தது. இன்னும் சில காலம் செல்ல ஆயுதங்களைக் கீழே வைப்பது என்ற சொற்றொடர் ஆயுதங்களைப் பாவிப்பதில்லை என்று உறுதி தரப்பட வேண்டும் என்றவாறு மாற்றப்பட்டது.

இம்மாதம் இரண்டாம் திகதி, ஜனாதிபதி பிரேமதாசா, இந்தியாவில் வைத்து நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் கூட, விடுதலைப் புலிகள் ஆயுதங்களைப் பாவிப்பதை நிறுத்த வேண்டும் என்றே பேச்சுக்கு நிபந்தனை விதித்தார். அதன் பின்னர் சரியாக ஒரு வாரத்திலே அவரின் ஆலோசகர், ஆயுதங்களைக் கீழே வைத்தவர்களுடனேயே பேச்சு என்கிறார். ஆளுக்கு ஆள், நேரத்துக்கு நேரம் நிலைப்பாடு மாறுகிறது. அடேயப்பா! நிலையில்லா நிலைப்பாடு!

ஆயுதங்களைக் கைவிட்டவர்களுடனேயே பேசுவது என்ற அரசின் நிலைப்பாட்டினால் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு வந்துவிடுமா என்பது முக்கியமான கேள்வி. ஆயுதங்களைக் கைவிட்ட குழுக்களுடன் கடந்த மூன்றரை வருடங்களாக அனைத்துக் கட்சி மாநாடு என்றும், தெரிவுக்குழு என்றும் நடத்திய அரசு தீர்வு எதனையாவது தொட்டாவது காட்டியதா? அனைத்துக் கட்சி மாநாடு போலவே தெரிவுக்குழுவும் தீர்வு எதனையும் தராது என்று கண்டு, கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகள் அதிலிருந்து வெளியேற அவகாசமும் விதித்திருக்கின்றன!

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டுப் பேச்சுக்குச் செல்வதால் மட்டும் நிலைமையில் மாற்றம் ஏற்படுமா? தீர்வு வந்துவிடுமா?

ஆயுதங்களை வைத்திருப்பவர்களுடன் அரசு பேசுவதில்லை என்றால் அரசாங்கம் மட்டும் ஆயுதங்களை வைத்திருக்கலாமா? நியாயப்படி அரசும் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டுத் தான் பேச்சுக்கு அழைக்கவேண்டும்.

அரசு ஆயுதங்களைக் கீழே வைப்பது என்பது, அதன் வன்முறைகளைத் தவிர்ப்பது என்பது, தமிழர் பிரதேசங்களில் உள்ள இராணுவமுகாம்களை, நிலைகளை அகற்றுவதன் மூலமே சாத்தியப்படும். அரசு அதனை முதலில் செய்யுமா?

# பழுதடைந்த உணவை உட்கொள்வதால் விரைவில் புற்றுநோயாளியாகும் ஆபத்து

யாழ். மத்திய மருந்தகத்தில் கடந்த மாதம் நடந்த புற்றுநோய் சம்பந்தமான கருத்தரங்கில் வடமாகாண புற்றுநோய் தடுப்புச் சங்கத் தலைவர் டாக்டர் இ. தெய்வேந்திரம் ஆற்றிய உரையின் தொகுப்பு இதுவாகும்.
தொகுத்தவர்: ஐ. செல்லையா.

இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் கொழும்பு செல்லும் நோயாளர்களில் 60 முதல் 70 சதவீதமானோர் புற்று நோயாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நோய் ஆரம்ப கட்டத்திலேயே உடலைத் தாக்கிய நிலையிலேயே வெளிவரும்; நோய் 80 வீதம் முற்றிய நிலையிலேயே மக்கள் சிகிச்சைக்கு வருகிறார்கள். புற்றுநோய் தொற்று நோயல்ல. இது தடுக்கக்கூடியது, மூன்றிலொரு பங்கு தடுக்கக் கூடியது. அடுத்த மூன்றில் ஒரு பகுதியினரை ஆரம்ப நிலையில் இனம் கண்டால் பூரண சிகிச்சை அளித்து குணப்படுத்தலாம். மிகுதி மூன்றிலொரு பகுதியினர் நோய் முற்றிய நிலையில் கண்டு பிடிக்கப்பட்டு மரணமடைகிறார்கள்.

**வரம்பு மீறிய வளர்ச்சி**

புற்று நோய் என்றால் என்ன?

உடல் பல உயிரணுக்களால் ஆக்கப்பட்டது. உயிர்க்கலங்கள் குறிப்பிட்ட பகுதியில் மட்டும் கட்டுப்பாட்டிற்குள் வளரும். ஆனால் இக்கலங்கள் ஒழுங்கற்ற நிலையில் அசாதாரண நிலையில் வளர்வதே புற்று நோயாகும். வரம்பு மீறிவளர்ச்சி அடைவதாகும் (Malignant).

உலகளாவிய ரீதியில் புற்று நோயினால் பாதிக்கப்பட்ட 410 லட்சம் மக்களில் வருடந்தோறும் 70 லட்சம் மக்கள் இறக்கிறார்கள். 59 லட்சம் புதிய நோயாளர்கள் உருவாகிறார்கள்; இதில் முப்பது லட்சம் பேர் மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

இந்தியாவில் 15 லட்சம் மக்கள் புற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 60 சத வீதமானோர் 35-65 வயதிற்குட்பட்டவர்கள். இலங்கையைப் பொறுத்த மட்டில், 15 வயதிற்கு மேற்பட்டோர் புற்றுநோயால் இறப்பதில் மூன்றாவது இடம் வகிக்கிறது. புற்று நோயால் இறக்கும் (சகல வயதினர்) வகுப்பில் ஏழாவது இடத்தைப் பெறுகிறது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கையின்படி இலங்கையில் 18,000 முதல் 30,000 பேர் வருடந்தோறும் புற்று நோயால் பாதிக்கப்படுகிறார்கள். 1991 இல் 5,000 பேர் வரை மஹரகம ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுள்ளனர். இதன்படி அறிவொரு பகுதி நோயாளர் மாத்திரம் சிகிச்சை பெற்றுள்ளனர். 80 வீதமானோர் காலம் கடந்து சிகிச்சைக்குச் சென்று உரிய காலத்திற்கு முன்பே இறக்கிறார்கள், 1991 இல் ஆண்கள் 2,564 பேர் (51%) பெண்கள் 2,448 பேர் (49%) சிகிச்சை பெற்றனர்.

ஆண்களில் 41.1 வீதமானோர் வாய், குரல்வளைப் புற்று நோயாலும் 41 வீதமான பெண்கள் மார்பகம், கருப்பைக் கழுத்து, இன உறுப்புப் புற்று நோயாலும் பாதிக்கப்படுகிறார்கள்.

புற்று நோயானது வாய், உதடு, தொண்டைப் பகுதி, மூக்கு, குரல்வளை நுரையீரல், உணவுக்குழாய், இரைப்பை, பெருங்குடல், சிறுகுடல், குருதி, சலப்பை, இனவிருத்தி உறுப்பு, மார்பகம், கருப்பைக்கழுத்து, சூலகம், கருப்பை, எலும்பு, தோல் ஆகிய பகுதிகளைப் பாதிக்கிறது.

தெரிந்தகாரணிகள்:- சூழல் நடத்தைப்பழக்கம் 80 வீதம்; மரபு வழி 20 வீதம்.

**காரணிகள்**

ஆராய்ச்சியின் படி புற்று நோய் ஏற்படுவதற்கான (அறிந்த) காரணிகள் வருமாறு:-

1. உணவு (பழுதடைந்தது) 35%; 2. புகையிலை புகைத்தல் 30%; 3. பாலியல் நடத்தைகள் 7%; 4. மதுபானம் 3%; 5. தொழில் தொடர்பு (அஸ்பெஸ்ரோஸ்) 4%; 6. உணவில் சேரும் இரசாயனங்கள் 1%; 7. தொழிற்சாலைக் கழிவுகள் 1%; 8. சில மருந்துகள் 1%; 9. கடும் குளிர், கடும் சூடு 3%; 10. தொற்றுக்கள் வைரஸ் ஊக்குவிப்பு 10%.

## புகைத்தல், வெற்றிலை, மூக்குப்பொடி என்பனவும் புற்றுநோய்க் காரணிகள்

★ புகையிலை புகைத்தல், பாக்கு வெற்றிலை ஆகியன வாய், தொண்டை, குரல்வளைப் புற்று நோய்க்கான காரணிகளாகும்.

★ பூசணம் பிடித்த உணவு வகை, பழுதடைந்த ஒடியல், நனைத்து ஊற வைத்து விற்கப்படும் மிளகாய், நனைந்த கச்சான் ஆகியன சரல், சொண்டு, தோல், எலும்பு புற்று நோய்க் காரணிகள்.

★ மதுபானம்—வாய் தொண்டை குரல்வளை புற்று நோய்க்கான காரணி.

"எசென்ஸ்" போன்ற செயற்கைத் திரவியங்கள் சலப்பை புற்றுநோய்க்கு வழி வகுக்கிறது.

★ அஸ்பெஸ்ரோஸ்— நுரையீரல் புற்றுநோய்க்கு வழிசெய்கிறது.

★ அதிக மிருகக் கொழுப்பை உட்கொள்வதால் மார்பு, பெருங்குடல் புற்று நோய் உண்டாகிறது.

★ பெண்கள் தனி நபர் சுகாதாரம் பேணாமை, பலருடன் பாலுறவு கொள்ளல் என்பன கருப்பைப் புற்று நோயைத் தோற்றுவிக்கின்றன.

மரபுவழிக் காரணிகள்— 1. மரபுவழி நோயுள்ளவர்கள், 2. குடும்பத் தொடர்பு, 3. மேத்தி-மகள், 4. எதிர்ப்புச்சக்தி குறைபாடு, 5. எய்ட்ஸ் வந்தவர்களுக்கும் அனேகமாக புற்றுநோய் வரலாம்.

**புகைத்தல், வெற்றிலை போடுதல்**

புகைப்பவர்களிலும் பார்க்க அருகிலிருப்பவர்களுக்கு அதிக தீமை ஏற்படும் என்பது கண்டறியப்பட்டுள்ளது, புகைப்பதால் வாழ்க்கைக் காலம் குறைதல், சுவாசப் புற்றுநோய், சதயப் புற்றுநோய், இருதய வியாதி, சுவாசக்குழாய் தாக்கம் அடைதல், குடற்புண் ஆகிய பாதிப்புகள் உண்டாகும்.

(Quid Chewing) தாம்பூலம் — வெற்றிலை — பாக்கு இதில் (Arjcaline) அரிக்கலையின் போதைவஸ்துள்ளது. — சுண்ணாம்பு — தொண்டைக்கரகரப்பு — புகையிலை (Nicotine) நிக்கற்றீன் இவை வாய்ப்புற்று தொண்டைப் புற்றுக் காரணிகள்.

அநேகமாக வழி வியாபாரிகள், ஆசிரியர்கள் வெற்றிலை பாவிப்பது அதிகம். மூக்குப் பொடியால் மூக்கில் புற்றுநோய் ஏற்படலாம்.

தாம்பூலம் தரிப்பதும்- வெற்றிலை பாக்குச் சப்புவதும் புற்றுநோய் வரக் காரணியாகும்.

வெற்றிலை பாக்கில் 'அரிக்கலயின்' எனும் போதை வஸ்து உள்ளது. புகையிலையில் 'நிக்கற்றீன்' உள்ளது. இவை வாய், தொண்டைப் புற்றுநோய்களை இலகுவில் தோற்றுவிக்கும்.

மூக்குப்பொடி பாவிப்பதாலும் மூக்கில் புற்றுநோய் ஏற்படலாம்.

(வளரும்)

## அதிபர் பதவிகளுக்கு 3,342 பேர் நியமனம்

கொழும்பு, அக். 11

பாடசாலைகளில் 3 ஆயிரத்து 342 அதிபர் பதவிகளுக்கான நியமனங்கள் மேற் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் நடைபெற்ற போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் இவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றன.

இம் மாதம் 361 முதலாம் தர அதிபர்களும், 754 இரண்டாம் தர அதிபர்களும், 2 ஆயிரத்து 258 மூன்றாம் தர அதிபர்களும் புதிதாக நியமிக்கப்படுவார்கள்.

பொதுச் சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைச் சபைத் தலைவர் ஜோர்ஜ் மெண்டிஸ் இவ்விபரங்களை வெளியிட்டார்.

இது தவிர சேவை மூப்பு, திறமை ஆகியவற்றின் அடிப்படையில் 72 அதிபர் முதலாம் தரத்திற்கும், 142 பேர் இரண்டாம் தரத்திற்கும் பதவி உயர்த்தப்படுவார்கள்.

தெரிவு செய்யப்பட்டுள்ள அதிபர்களின் பெயர்ப்பட்டியல்கள் மாகாண கல்விச் செயலாளர்களுக்கும், பணிப்பாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்படும் என்றும் திரு. மெண்டிஸ் கூறினார். (த-எ)

## கிளிநொச்சி செஞ்சிலுவை கோழிக்குஞ்சு விநியோகம்

கிளிநொச்சி, அக். 11

கிளிநொச்சிப் பகுதியில் உள்ள கால்நடை வளர்ப்பாளர்களுக்கு கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கம் கோழிக்குஞ்சுகளை தருவித்து வழங்கி வருகின்றது.

அண்மையில் இத்திட்டத்தின் கீழ் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழிக்குஞ்சுகள் ஸ்கந்தபுரம், கண்டாவளைப் பகுதிகளிலுள்ள கோழிப்பண்ணைகளுக்கு வழங்கப்பட்டன.

அத்துடன் கண்டாவளைப் பகுதியில் செஞ்சிலுவைச் சங்கம் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழைத்தோட்டம் ஒன்றையும் அமைக்கவுள்ளது. (ம)

## பாடசாலை சிறுவருக்காக சுகாதாரச் சேவை ஆரம்பம்

கொழும்பு, அக். 11

பாடசாலை சுகாதார சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கிறது. உயர் கல்விப் பணியகம் தயாரித்த உள்ள திட்டத்தின்படி இச்சுகாதார சேவை நாடு முழுவதும் செயற்படுத்தப்படவிருக்கிறது.

இத்திட்டத்தின் படி அனைத்து, மாணவர்களும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். பின்னர் அவர்களுக்குள்ள நோய்கள் இனங்காணப்பட்டு அவற்றுக்கு சிகிச்சையளிக்கப்படும். தொற்று நோய்த் தடுப்பு சிகிச்சையும், மாணவர்களுக்கு அளிக்கப்படும்.

சிறுவர்களின் மருத்துவத் தேவைகளைக் கவனிப்பதற்காக கொழும்பு, கண்டி மற்றும் ஏனைய பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் டாக்டர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சகல பகுதிகளிலும் உள்ள சுகாதார, மருத்துவ அலுவலகம், பாடசாலைச் சுகாதார சேவையில் ஈடுபடுவதற்கென ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் டாக்டர்களை அந்தந்த பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கும்.

(த-எ)

## றெட்பானா மரம் நடுகை

யாழ்ப்பாணம், அக். 11

றெட்பானா நிறுவனம் கோப்பாய் சந்திக்கும், கைதடிக்கும் இடைப்பட்ட பாதையோர வெளிகளில் 500 மரக்கன்றுகளை நடுகை செய்ய உள்ளது.

சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரமான இப் பகுதியில் புளி, சவுக்கு மரங்கள் நாட்டப்படவுள்ளன.

(த-ம-162)

## சிறுவர் பாதுகாப்பு நிதியம் உதவி

யாழ்ப்பாணம், அக். 11

மழைகாலத்தில் பயன்படுத்துவதற்கு உகந்த பிளாஸ்ரிக் சீலைகளை ஐக்கிய இராட்சிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்திற்கு வழங்கியுள்ளது.

இவை இணையத்தில் அங்கம் வகிக்கும் அகதிமுகாம்களுக்கு வழங்கப்படவுள்ளன.

(த-ம-162)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வீரவாகு கந்தசாமி
(நயினாதீவு)

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த முன்னாள் கிராம சபைத் தலைவர் திரு. வீரவாகு - கந்தசாமி அவர்கள் நயினாதீவில் 08 - 10 - 1992 இல் காலமானார்.

அன்னார் திலகவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வீரவாகு தம்பதிகளின் தலைமகனும், காலஞ்சென்ற சி. நாகமுத்து தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் கதிரவேலு, திருமதி தில்லைநாயகி இளையதம்பி ஆகியோரின் அன்புத் தமையனாரும், நாகேஸ்வரன் (பிரான்ஸ்), நாகராசேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், நீலவண்ணனின் (கனடா), மாமனாருமாவார். இறுதிக் கிரியைகள் 08 - 10 - 1992 நயினாதீவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. இளையதம்பி.
(மைத்துனர்)

36/5. பண்டாரக்குளம் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[22838]

## முருகேசு மாணிக்கம்

புங்குடுதீவு 9 ம் வட்டாரத்தைச் சேர்ந்த முருகேசு மாணிக்கம் கொழும்பில் காலமானார். இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும், திலகவதி, (கனடா), கிருஷ்ணராஜா [V. மாணிக்கம் அன் பிறதர்ஸ்], மகேந்திரராசா (பிரான்ஸ்), சத்தியபாமா, கெங்காலெச்சுமி, கலாவதனி [டென்மார்க்], குமரகுருபரன் [ஜேர்மன்], சுதாகரன் [ஜேர்மன்] ஆகியோரின் அன்புத் தந்தையும், சசம்பசிவம் (கனடா), முத்துலிங்கம், யோகேந்திரன் (பிரான்ஸ்), விஜயகுமார் (டென்மார்க்), வசந்தராணி, கலைமகள் ஆகியோரின் அன்பு மாமனாரும், செல்லத்துரை (லண்டன்), சொக்கலிங்கம் (லண்டன்), சின்னத்தம்பி, இராமலிங்கம் (அதிபர், கனகரத்தினம் மகாவித்தியாலயம்), முத்துக்குமாரு, பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சின்னலிங்கம், மனோன்மணி, ஐயம்பெருமாள், வயிரவநாதன், சிவஞானம், அமராவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 10 - 10 - 92 அன்று கொழும்பில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
முத்துலிங்கம்
(மருமகன்)

இல. 10, கிஸ்ணபிள்ளை லேன்,
சச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

(22842)

## கதிரவேலு கனகரட்ணம்

வட்டு. மேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவரும், கல்லூரி ஒழுங்கை வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகக் கொண்டவருமான திரு. கதிரவேலு கனகரட்ணம் நேற்று [10-10-92] சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற குணரத்தினம், பஞ்சரட்ணம், ராஜரட்ணம், தனலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலசுப்பிரமணியம், ராஜி பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை இன்று (11-10-92) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;
ராஜி பாலசுப்பிரமணியம்
[மருமகள்]

கல்லூரி ஒழுங்கை,
வட்டுக்கோட்டை.

[22843]

## திருமதி ரஜனி ஸ்ரீரஞ்சன்

நல்லூர் 89, மூத்தவிநாயகர் வீதியைச் சேர்ந்த திருமதி ரஜனி [வடபிராந்திய போக்குவரத்துச் சபை, கோண்டாவில்] 10-10 92 அன்று அகால மரணமானார். அன்னார் திரு. ஸ்ரீரஞ்சனின் [இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணம்] அன்பு மனைவியும், மதுரா, சாரங்கன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திரு. அற்புதநாதன், திருமதி ஜெகதாம்பாள் ஆகியோரின் மகளும், நகுலன் மாலினி, சந்திரன் குமுதினி, சௌந்தரராஜன் பாமினி, முருகதாஸ் சுபாசினி, செல்வன் ரவீந்திரன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [11-10-92] பிற்பகல் 3 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ஜெகதாம்பாள்
[தாயார்]

89, மூத்த விநாயகர் வீதி,
நல்லூர்.

[22844]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 202/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 11-10-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## இடைக்காடுவாசி மிதிவெடியில் காலை இழந்தார்!

இடைக்காடு அம்மன் கோவில் பகுதியில் நேற்று மாலை மிதிவெடியில் சிக்கிய ஒருவர் தமது இடது காலை [முழங்காலுக்குக் கீழ்] இழந்தார்.

இடைக்காட்டைச் சேர்ந்த வல்லிபுரம் தம்பி [45 வயது] என்பவரே கால் துண்டிக்கப்பட்டவர் ஆவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வயல் வேலைகளைக் கவனிப்பதற்காக கட்டாந்தரைப் பகுதியூடாக செல்கையில் இவர் மிதிவெடியில் சிக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஓ-15]

## வீரமரணம்

மணலாறில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தவறுதலான வெடி விபத்துச் சம்பவத்தில் வீரவேங்கை திவாகரன் [சிந்தாமணி அம்பிகைபாலன் — கிளிநொச்சி] என்ற போராளி வீரமரணமடைந்தார். [ஓ-5]

## மாதகல் மேற்கில் நெல் விதைப்பு

சுழிபுரம், அக். 11

மாதகல் மேற்கு பகுதியை அண்டிய வயல்களில் விவசாயிகள் பீதியின் மத்தியிலும் நெல் விதைப்பில் ஈடுபட்டுள்ளனர். (ஓ-28)

## 'கொப்பே'...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தனர்.

லெப்டினன்ட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ போன்றோர் எதிர்ப்பை வெளிப்படுத்தியோரில் முக்கியமானவர்கள் ஆவர்.

அவர்களின் எதிர்ப்பினாலேயே கடந்த ஏப்ரலில் கட்டுப் படைத் தலைமையகத்தின் அதிகாரம் பகிரப்பட்டு, முப்படைத் தளபதிகளிடமும் தனித்தனியாகப் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன என்று அப்போது செய்திகள் வெளியாகின என்பது தெரிந்ததே.

இப்போது டென்ஸில் கொப்பேகடுவவும் மற்றும் முன்னணித் தளபதிகளும் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் கண்டோடு அழிந்த பின்னர், மீண்டும் அதிகாரங்கள் கட்டுப்படைத் தலைமையகத்துக்கு வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. [உ]

## மருந்துத்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை வெளியிட்டார்.

கொழும்பில் மருந்து விநியோகத்துக்குப் பொறுப்பான உயர் அதிகாரி ஒருவரைத் தாம் நேரில் சந்தித்து யாழ்ப்பாணத்தில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு குறித்துப் புள்ளி விவரங்களுடன் விளக்கியபோது—

அந்த அதிகாரி மருந்துத் தட்டுபாடு மோசமாக உள்ளதைப் புலப்படுத்தும் விதத்தில் தமக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து கிடைத்த தகவல்கள், தரவுகள் அமையவில்லை என்று கூறியதாக — மேற்கூறிய கலந்துரையாடலின் போது சம்பந்தப்பட்ட தொண்டர் நிறுவன அதிகாரி கவலை தெரிவித்தார்.

எந்தத் தரப்பில் சரியான தகவல்கள், தரவுகள் கொடுக்கப்படுகின்றன, எந்தத் தரப்பில் தவறான விளக்கம் கொடுக்கப்படுகிறது என்பது தெரியவில்லை. ஆனால் பாதிக்கப்படுபவர்களோ அப்பாவி யாழ். குடாநாட்டு நோயாளிகளே! [அ-5]

## வவுனியாவில் சிப்பாய் பலி

யாழ்ப்பாணம், அக் 11

வவுனியாவில் கணேசபுரத்தில் அமைந்திருந்த இராணுவக் காவலரண் மீது நேற்றுக் காலை 7.30 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் பலியானார்.

காவலரணுக்கு அருகில் நின்ற சமயம் விடுதலைப் புலிகள் நடத்திய 'அருள் 89' தாக்குதலில் அந்தச் சிப்பாய் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

## வவுனியா

## பல்கலைக்கழக கல்லூரியில் மொத்தம் 3 பயிற்சி நெறிகள்

வவுனியா, அக், 11

வவுனியாவிலுள்ள வடமாநில பல்கலைக் கழகக் கல்லூரியில் இப்போது மொத்தம் மூன்று பயிற்சி நெறிகள் நடந்து வருகின்றன.

கணித விஞ்ஞானம், கணக்கியலும் நிதியும், ஆங்கில டிப்ளோமா ஆகிய நெறிகளே தற்போழுது அங்கு நடத்தப்பட்டு வருகின்றன.

இவை ஒவ்வொன்றும் இரண்டு வருட பயிற்சி நெறிகளாகும். 1991 — 92 நடப்பு கல்வியாண்டுக்கு மொத்தம் 100 மாணவர்களைப் பயிற்சிக்கு அனுமதிக்க வடமாநில பல்கலைக் கழக கல்லூரிக்கு உயர்கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. கணித விஞ்ஞானநெறி கல்லூரி நிறுவப்பட்ட ஆரம்பத்திலேயே தொடங்கப்பட்டது.

இந்த மூன்று நெறிகளுக்குமென 12 போதனாசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## அம்பாறையில் நிர்வாகம் முற்றிலும் சிங்கள மயம்

யாழ்ப்பாணம், அக். 11

அம்பாறை மாவட்டத்தில் நிர்வாகத்தைப் பூரண சிங்கள மயமாக்கும் அரசின் திட்டத்தின் கீழ் அங்குள்ள அரச அலுவலகங்களின் செயற்பாடுகள் முழுமையாக சிங்கள மொழி மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சாதாரணமாக அரச அலுவலகங்களில் கையாளப்படும் சகல படிவங்களும், தனிச் சிங்களத்திலேயே காணப்படுகின்றன. தமிழர்களின் பதிவுச் சான்றிதழ்கள், வாக்காளர் இடாப்புக்கள் என்பன கூட சிங்களத்திலேயே பதியப்படுகின்றன. [அ-5]


# வைத்தியசாலை இடம்மாற்றம்

அளவெட்டியில் இயங்கிவந்த

**மயூரா**

**வைத்தியசாலை**

தற்பொழுது
மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்திற்கு
முன்பாக இயங்குகின்றது.

டாக்டர்
வைத்திலிங்கம் வரதலிங்கம்

(4996)


# மரண அறிவித்தல்

## ஆவாதிமுருகர் சுப்பிரமணியம்
[காரைநகர் விளானை, களபூமி]

ஆவாதிமுருகர் சுப்பிரமணியம் 10-10-92 இல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை முருகர் - சின்னிப்பிள்ளையின் மகனும், நாகம்மாவின் அன்புக் கணவரும், இராசரத்தினத்தின் அன்புத் தந்தையும், நாகேஸ்வரியின் அன்பு மாமனும், ரவிபாலன், சிவதர்சினி, சிவாசன் ஆகியோரின் அன்புப் பேரனும், கணபதிப்பிள்ளை - வேலுப்பிள்ளை, கணபதிப்பிள்ளை - கதிர்காமு ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற முருகர், காசிப்பிள்ளை, சிதம்பரம், சின்னம்மா, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும்—

காலஞ்சென்ற கந்தையா, சங்கரப்பிள்ளை, சுப்பிரமணியம், இராசம்மா ஆகியோரின் மைத்துனரும், கந்தர் சின்னக்குட்டியின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் சித்தன்கேணியில் இன்று காலை 11 00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆவாதி மு. சு. இராசரத்தினம்
[மகன்]

[22846]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org